விடுநர்
திரு.பெ.க.வேணுசேகரன், பி.எஸ்.சி.,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1.முதன்மை கல்வி அலுவலர்,வேலூர்.
2.மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர்/திருப்பத்தூர்/வாணியம்பாடி/
இராணிப்பேட்டை/அரக்கோணம்.

**ந.க.கே6/25066/2019, நாள்: .01.2020**

அய்யா,

பொருள் : ஆதிதிராவிடர் நலம் - வேலூர் மாவட்டம் - 2019-20ஆம் கல்வியாண்டு - ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் - அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/மேனிலைப்பள்ளிகளில் கடந்த ஆண்டு 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயின்று இணைய வழியில் விண்ணப்பித்திருந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் புதுப்பித்தல் விண்ணப்பங்களை விரைந்து இணைய வழியில் புதுப்பிக்கவும், புதுப்பிக்கப்பட்ட மாணாக்கர்களின் EMIS NUMBER பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தக் கோரியது – **நினைவூட்டுதல்** - தொடர்பாக.

பார்வை : 1.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5 அவர்களின் மின்னஞ்சல், நாள்:16.12.2019
2.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5 அவர்களின் மின்னஞ்சல், நாள்:03.01.2020

*****

பார்வையில் காணும் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் மின்னஞ்சல் செய்தியில் இணைய வழியில் பெறப்பட்டு வரும் போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகை புதுப்பித்தல் விண்ணப்பங்களை விரைந்து இணைய வழியில் புதுப்பிக்கவும், புதுப்பிக்கப்பட்ட மாணாக்கர்களின் EMIS NUMBER பதிவேற்றம் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை 2-ல் காணும் சென்னை ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் அவர்களின் மின்னஞ்சல் செய்தியில் இந்நாளது வரை இணைய வழியில் போஸ்ட் மெட்ரிக் மற்றும் ப்ரீ மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கான புதுப்பித்தல்(Renewal) மற்றும் EMIS Number பதிவேற்றம் செய்யாத பள்ளிகளின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டு, விரைந்து இப்பணியை முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இணைப்பில் காணும் நிலுவைப்பட்டியலில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலைப்பள்ளி/ மேனிலைப்பள்ளிகளில் 2019-20ஆம் கல்வியாண்டில் ப்ரீ மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில் கடந்த ஆண்டில் 9 மற்றும் 11ஆம் வகுப்பு பயின்று இணைய வழியில் விண்ணப்பித்திருந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் புதுப்பித்தல்(**Renewal**) விண்ணப்பங்களை விரைந்து இணைய வழியில் புதுப்பிக்கவும், அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட மாணாக்கர்களின் EMIS NUMBER பதிவேற்றம் செய்யவும் சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: 1.நிலுவைப்பட்டியல்
2. Steps for Renewal & EMIS No. Update

3/1/2020

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்
வேலூர்.

03/01/2020

நகல்: 1.மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்/ இராணிப்பேட்டை/ திருப்பத்தூர்.
2.ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை-5
} தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Scanned by CamScanner